**28.03.2021**







# போட்டித் தேர்வுகளுக்கு மாணவ, மாணவியர்கள் தொடர்ந்து தயாராவீர் !

# ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

## வேண்டுகோள்!

**வாரந்தோறும் ஞாயிறு காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.**

பயிற்சி கட்டணம் : லஞ்சம் வாங்க மாட்டேன் என்ற உறுதிமொழி மட்டும்

**இந்த வாரத்திற்கான (28.03.2021) (PDF) வழங்கியவர், நமது மாணவரும், திருப்பூரில் துணைவட்டாட்சியருமான**

திரு.**K.பெரியசாமி** அவர்களுக்கு

**ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையத்தின்**

சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவண்,

# ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

**இடம் : நந்தவன மரத்தடி, புதிய காவல்நிலையம், பழையஆயக்குடி.**

**பஸ் நிறுத்தம் : ஆயக்குடி கோச்சிங் சென்டர், புதிய காவல்நிலையம், பழையஆயக்குடி**

குறிப்பு : திறனறிவு, நடப்பு நிகழ்வுகள், அரசியல், வரலாறு, புவியியல், தமிழர் பண்பாடு ஆகிய பகுதிகளுக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டே இருங்கள் !
160/200 Over ... வெற்றி உறுதி !

அனைவரும் கண்டிப்பாக **முகக்கவசம்** (MASK) அணிந்து வரவும்.

## நடப்பு நிகழ்வுகள்

1. சரியான கூற்று எது?
   1. மகாத்மா காந்தியின் 125-வது பிறந்த ஆண்டை கொண்டாடும் விதமாக 1995-ஆம் ஆண்டு முதல் 'காந்தி அமைதி விருதானது' மத்திய அரசால் வழங்கப்படுகிறது.
   2. 2020-ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருது பெறுபவர் 'வங்கபந்து' என அழைக்கப்படும் ஷேக் முஜிபூர் ரஹ்மான்.
   3. காந்தி அமைதி விருது ரூ.1 கோடி ரொக்க பரிசாகும்.
   4. 2019-ஆம் ஆண்டிற்கான காந்தி அமைதி விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர் கயூஸ் பின் சையது அல் சையது.

   a) 1, 2, 3　b) 2, 3, 4　c) 1, 3, 4　**d) அனைத்தும்**
2. உலகின் பலம் வாய்ந்த ராணுவத்தை கொண்ட நாடுகள் வரிசை?
   **a) சீனா, அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, பிரான்ஸ்**　b) அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியா, பிரான்ஸ்
   c) ரஷ்யா, அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரான்ஸ்　d) எதுவும் இல்லை
3. தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு எந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது?
   a) 1994　**b) 2019**　c) 2005　d) 2010
4. சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்தில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் வைப்பு தொகை (Deposit) திரும்ப பெற எவ்வளவு சதவிகிதம் ஓட்டு பெற வேண்டும்?
   a) 20 %　**b) 16.6%**　c) 50%　d) 33%
5. தமிழகத்தின் முதல் பெண் சட்டப்பேரவை உறுப்பினர்?
   **a) டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி**　b) ருக்மணி லட்சுமிபதி
   c) ஜெயலலிதா　d) ஜானகி ராமச்சந்திரன்
6. தமிழகத்தின் முதல் பெண் முதல்வர்?
   a) ஜெயலலிதா　**b) ஜானகி ராமச்சந்திரன்**　c) கோகுல் இந்திரா　d) சசிகலா
7. தமிழகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் முதல்வர்?
   **a) ஜெயலலிதா**　b) வளர்மதி　c) சுப்புலட்சுமி ஜெகதீசன்　d) சசிகலா புஷ்பா
8. இந்தியாவில் தற்போது உள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகள், மாநில கட்சிகள்?
   **a) 8, 57**　b) 10, 55　c) 7, 57　d) 6, 54
9. உலக தண்ணீர் தினம் மார்ச் - 22, 2021-ன் மையக்கருத்து?
   **a) நீரின் மதிப்பு**　b) கடலின் அளவு　c) நீரை பாதுகாப்போம்　d) வறட்சியின் மதிப்பு
10. 2020-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்?
    a) சோ.தர்மன்　b) வண்ணதாசன்　c) சு.வெங்கடேசன்　**d) இமையம்**
11. 75-வது சுதந்திர தினவிழா எந்த பெயரில் கொண்டாடப்படுகிறது?
    **a) அம்ரித் மகோத்சவ்**　b) உத்சவ் பாரத்
    c) இண்டியா உட்சவ்　d) மகோத்சவ் பாரத்
12. எந்தக் கோளில் மிகப்பெரிய நீர் வளம் இருக்கலாம் என நாசா தெரிவித்துள்ளது?
    a) சனி　b) வியாழன்　c) பூமி　**d) செவ்வாய்**
13. உலகிலேயே மகிழ்ச்சியான நாடுகளில் இந்தியா 139-வது இடம் பெற்றுள்ள நிலையில் முதலிடம் பெற்ற நாடு?
    **a) பின்லாந்து**　b) பாகிஸ்தான்　c) வங்கதேசம்　d) சீனா
14. யானைகள் மற்றும் புலிகள் கணக்கெடுப்பு ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் நிலையில் வரையாடு கணக்கெடுப்பு பணி ………… ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது?
    a) 5　b) 1　c) 3　**d) 4**
15. காப்பீட்டுத் துறையில் நேரடி அந்நிய முதலீடு ……..% லிருந்து ………% ஆக உயர்த்தப்பட்டுள்ளது?
    **a) 49, 74**　b) 26, 49　c) 23, 49　d) 26, 74
16. உலக வானிலை தினம்?
    a) மார்ச் 24　**b) மார்ச் 23**　c) மார்ச் 21　d) மார்ச் 22

## ஜெயிலர்

1. 73-வது சட்டதிருத்தம் வந்தபின்பு முதன்முதலில் பஞ்சாயத்துகளுக்கு நேரடி தேர்தல் நடத்திய இந்திய மாநிலம்?
   a. ராஜஸ்தான் b. ஆந்திரா c. குஜராத் **d. மத்தியப்பிரதேசம்**
2. இந்தியாவின் மாநிலத்தில் முதன் முதலில் பெண் தலித் முதல்வராக பதவியில் இருந்தவர்?
   **a. செல்வி.மாயாவதி** b. திருமதி. சரோஜினி நாயுடு
   c. திருமதி. பத்மஜா நாயுடு d. திருமதி. நந்தினி சத்பதி
3. குடியரசு தலைவர் ஒரு சாதாரண மசோதாவை மீண்டும் சபைக்கு எத்தனை முறை திரும்ப அனுப்பலாம்?
   **a. ஒருமுறை** b. இருமுறை c. முடியாது d. மூன்று முறை
4. இந்திய உச்சநீதிமன்ற நீதிபதிகளின் சம்பளம் எந்த நிதியிலிருந்து வழங்கப்படுகிறது?
   a. அவசரநிதி **b. ஒருங்கிணைப்பு நிதி** c. நிவாரண நிதி d. எதுவும்இல்லை
5. பொதுப்பட்டியலில் இல்லாதது எது?
   a. கல்வி b. காடுகள் c. திருமணம் **d. நதிகள்**
6. தமிழகத்தில் பஞ்சாயத்துராஜ் திட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு?
   a. 1992 b. 1993 **c. 1994** d. 2000
7. இந்திய தலைமை தணிக்கை அதிகாரியின் பதவிக்காலம்?
   a. 3 ஆண்டுகள் b. 5 ஆண்டுகள் c. 4 ஆண்டுகள் **d. 6 ஆண்டுகள்**
8. சரியான இணை எது?
   1. பொதுகணக்கு குழு - 1923 2. மதிப்பீட்டுக்குழு - 1950
   3. பொதுதுறைகளுக்கான குழு - 1963
   a. 1 மட்டும் b. 2 மட்டும் c. 3 மட்டும் **d. அனைத்தும்**
9. பஞ்சாயத்து தேர்தல்கள் குறித்து கூறும் சட்டப்பிரிவு?
   **a. Art 243K** b. Art 243 D c. Art 243 G d. Art 243
10. தவறான கூற்று எது?
    a. Art 368-ன் படி அரசியலமைப்பில் சட்ட திருத்தம் கொண்டு வரலாம்
    b. சட்டதிருத்தம் 3 வகையில் செயல்படுகிறது
    **c. மாநில அரசு அரசியலமைப்பை திருத்த சட்டம் கொண்டு வர இயலும்**
    d. நாடாளுமன்றமே அரசியலமைப்பை திருத்தும் அதிகாரம் பெற்றது
11. மாநில அரசுகள் தங்களுக்கு வேண்டிய மொழியை ஆட்சி மொழியாக வைத்துக் கொள்ளலாம் என கூறும் அரசியலமைப்பு விதி?
    a. Art 344 **b. Art 345** c. Art 348 d. Art 343
12. சாதி, சமய, இன பால் வேறுபாடின்றி அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்குவது?
    **a. Art 325** b. Art 360 c. Art 324 d. Art 315
13. அலகாபாத் உயர்நீதிமன்றம் துவக்கப்பட்ட ஆண்டு?
    a. 1862 **b. 1866** c. 2004 d. 1947
14. சரியான இணை எது?
    1. Art 222 உயர்நீதிமன்ற நீதிபதிகள் இடமாற்றம் 2. Art 237A மாவட்ட நீதிபதிகள் பற்று கூறுகிறது
    3. Art 177 - அட்வகேட் ஜெனரல் சட்டமன்ற கூட்ட தொடரில் பங்கேற்கலாம். ஆனால் வாக்களிக்க இயலாது
    4. Art 323A - நிர்வாக தீர்ப்பாயங்கள்
    a. 1, 2 மட்டும் b. 2, 3, 4 மட்டும் c. 1, 4 மட்டும் **d. அனைத்தும்**
15. மாநிலங்களவைக்கு குடியரசு தலைவர் கலை, இலக்கியம், அறிவியல், சமூகசேவை துறைகளில் சிறந்து விளங்கும் 12 பேரை நியமனம் செய்கிறார். சமூக பணி மூலம் உறுப்பினர் நியமனம் எந்த நாட்டிலிருந்து பெறப்பட்டது?
    **a. அயர்லாந்து** b. இங்கிலாந்து c. ஆஸ்திரேலியா d. அமெரிக்கா

## POST-INDEPENDENCE DEVELOPMENTS:

| | | |
|---|---|---|
| First Law Commission | 1955-58 | Mr. M. C. Setalvad<br>Former Attorney General of India |
| Second Law Commission | 1958-61 | Mr. Justice T. V. Venkatarama Aiyar. |
| Third Law Commission | 1961-64 | Mr. Justice J. L. Kapur |
| Fourth Law Commission | 1964-68 | Mr. Justice J. L. Kapur |
| Fifth Law Commission | 1968-71 | Mr. K. V. K. Sundaram, I. C. S. |
| Sixth Law Commission | 1971-74 | Mr. Justice Dr. P. B. Gajendragadkar |
| Seventh Law Commission | 1974-77 | Mr. Justice Dr. P. B. Gajendragadkar |
| Eighth Law Commission | 1977-79 | Mr. Justice H. R. Khanna |
| Ninth Law Commission | 1979-80 | Mr. Justice P. V. Dixit |
| Tenth Law Commission | 1981-85 | Mr. Justice K. K. Mathew |
| Eleventh Law Commission | 1985-88 | Mr. Justice D. A. Desai |
| Twelfth Law Commission | 1988-91 | Mr. Justice M. P. Thakkar |
| Thirteenth Law Commission | 1991-94 | Mr. Justice K. N. Singh |
| Fourteenth Law Commission | 1995-97 | Mr. Justice K Jayachandra Reddy |
| Fifteenth Law Commission | 1997-2000 | Mr. Justice B. P. Jeevan Reddy |
| Sixteenth Law Commission | 2000-2001 | Mr. Justice B. P. Jeevan Reddy |
| | 2002-2003 | Mr. Justice M. Jagannadha Rao |
| Seventeenth Law Commission | 2003-2006 | Mr. Justice M. Jagannadha Rao |
| Eighteenth Law Commission | 2006-2009 | Dr. Justice AR Lakshmanan |
| Nineteenth Law Commission | 2009-2012 | Mr. Justice P. V. Reddi |
| Twentieth Law Commission | 2012-2013 | Mr. Justice D. K. Jain |
| | 2013-2015 | Mr. Justice A. P. Shah |
| Twenty first Law Commission | 2015-2018 | Mr. Justice Balbir Singh Chauhan |

## PAY COMMISSIONS IN INDIA

**I - 1946 - Srinivasa varadhachariar**
**II - 1957 - Jaganath Das**
**III - 1970 - Reghubir Dayal**
**IV - 1983 - P.N.Singhal**
**V - 1994 - Ratnavel Pandiayan**
**VI - 2006 - B.N.Srikrishna**
**VII - 2014 - A.K.Mathoor**

## LOKAYUKTA IN STATES

| State | Year |
|---|---|
| Maharashtra | 1971 |
| Rajasthan | 1973 |
| Bihar | 1974 |
| UP | 1975 |
| MP | 1981 |
| AP, Himachal | 1983 |
| Karnataka | 1985 |
| Gujarat | 1986 |
| Punjab | 1995 |

## FINANCE COMMISSION IN INDIA

**I - K.C.Neogy**
**II - Santhanam**
**III - A.KChndra**
**IV - Dr.Rajamannar**
**V - Mahavir Tyagi**
**VI - Brahmananda Reddy**
**VII - Shelat**
**VIII - Y.B.Chavan**
**IX - N.K.P.Salve**
**X - K.C.Pant**
**XI - A.M.Khusro**
**XII - Rangarajan**
**XIII - Vijay Kellkar**
**XIV - Y.V.Reddy**
**XV - N.K.Singh**

## வரலாறு

1. பொருத்துக
a) ஜாலியன் வாலாபாக் படுகொலை - 1923
b) சுயராஜ்ய கட்சி - 1931
c) தண்டியாத்திரை - 1930
d) பூனா ஒப்பந்தம் - 1919
d) காந்தி இர்வின் ஒப்பந்தம் - 1932

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| **A** | **4** | **1** | **3** | **5** | **2** |
| B | 4 | 1 | 5 | 3 | 2 |
| C | 1 | 2 | 3 | 4 | 5 |
| D | 5 | 4 | 3 | 2 | 1 |

2. கிரிப்ஸ் யோசனைகளை பின்தேதியிட்ட காசோலை என்றவர்?
a) நேரு **b) காந்திஜி** c) அட்லி d) ஜின்னா
3. ஆகஸ்ட் சலுகை (August Offer) அறிமுகப்படுத்தப்பட்ட நாள்?
a) ஆகஸ்ட் 9, 1940 **b) ஆகஸ்ட் 8, 1940**
c) ஆகஸ்ட் 10, 1940 d) ஆகஸ்ட் 6, 1940
4. பிரிட்டிஷ் பிரதமர் வகுப்பு கொடையை அறிவித்த நாள்?
**a) ஆகஸ்ட் 16, 1932** b) ஆகஸ்ட் 15, 1932
c) ஆகஸ்ட் 20, 1932 d) ஆகஸ்ட் 14, 1932
5. காந்தி இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தான நாள்?
a) மார்ச் 9, 1931 b) மார்ச் 8, 1931 **c) மார்ச் 10, 1931** d) மார்ச் 11, 1931
6. மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ் ஆகியோர் சுயராஜ்ய கட்சியை துவக்கிய நாள்?
a) ஜனவரி 31, 1923 b) ஜனவரி 26, 1923 **c) ஜனவரி 1, 1923** d) எதுவுமில்லை
7. கிலாபத் தினம்?
**a) அக்டோபர் 19, 1919** b) அக்டோபர் 20, 1919
c) அக்டோபர் 17, 1919 d) அக்டோபர் 23, 1919
8. கேடா சத்யா கிரகம் காந்திஜி யாரை ஆதரிக்க தொடங்கினார்?
a) அவரி பணியாளர்கள் b) ஆலய ஊழியர்கள் **c) குடியானவர்கள்** d) அரசு ஊழியர்கள்
9. முஸ்லிம் லீக் தோற்றுவிக்கப்பட்ட நாள்?
a) டிசம்பர் 10, 1906 **b) டிசம்பர் 30, 1906** c) டிசம்பர் 15, 1906 d) டிசம்பர் 7, 1906
10. பாரத மாதா சங்கம் தோற்றுவித்தவர்?
a) காந்திஜி **b) நீலகண்ட பிரம்மசாரி** c) சவார்க்கர் d) சைமன்
11. பொருத்துக?
a) கேசரி - 1. மகாராஷ்டிரம்
b) பஞ்சாபின் சிங்கம் - 2. முஸ்லிம் லீக்
c) சலிமுல்லாகான் - 3. லாலா ஹர்தயாள்
d) கதர்கட்சி - 4. பாலகங்காரதிலகர்
e) அபிநவபாரத் - 5. லாலா லஜபதிராய்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| **A** | **4** | **5** | **2** | **3** | **1** |
| B | 4 | 5 | 3 | 2 | 1 |
| C | 1 | 2 | 3 | 4 | 5 |
| D | 5 | 4 | 3 | 1 | 2 |

12. வங்கப்பிரிவினை நடைமுறைக்கு வந்த நாள்?
**a) அக்டோபர் 16, 1905** b) அக்டோபர் 10, 1905
c) அக்டோபர் 2, 1905 d) அப்டோகர் 20, 1905
13. 1886-ல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் உறுப்பினர்களுக்கு தேநீர் விருந்தளித்த ஆங்கிலேயர்?
**a) டப்ரின்** b) ரிப்பன் c) கானிங் d) பெண்டிங்
14. செல்வ சுரண்டல் கோட்பாடு?
a) மார்க்கஸ் b) ஏங்கல்ஸ் c) மார்ஷல் **d) தாதாபாய் நௌரோஜி**
15. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பொதுஅவையில் உறுப்பினரான முதல் இந்தியர்?
**a) தாதாபாய் நௌரோஜி** b) திலகர் c) ராணடே d) எவருமில்லை
16. சரியான இணை எது?
1. சென்னை சுதேசி இயக்கம் - 1952, 2. சென்னை மகாஜன கழகம் - 1884
3. பம்பாய் கழகம் - 1852, 4. பிரிட்டிஷ் இந்திய கழகம் - 1951
a) 1 மட்டும் b) 1, 3 மட்டும் c) 2 மட்டும் **d) அனைத்தும்**
17. இராமலிங்க அடிகளார் சுத்த சன்மார்க்க சங்கத்தை தோற்றுவித்த ஆண்டு?
a) 1859 **b) 1865** c) 1858 d) 1857
18. மறுமுறைகண்ட வாசகம் ஆசிரியர்?
a) திருவள்ளுவர் b) நம்பியாண்டவர் நம்பி c) மனு **d) இராமலிங்க அடிகள்**

19. சரியான இணை எது?
1. பிரார்த்தனை சமாஜம் - ஆத்மராம் பாண்டுரங்
2. ஆரிய சமாஜம் - தயானந்த சரஸ்வதி
3. பிரம்ம சமாஜம் - ராஜாராம் மோகன்ராய்
4. தியாசாபில் சங்கம் - மேடம் பிளவட்ஸ்கி, கர்னல் ஆல்காட்
5. இராமகிருஷ்ண இயக்கம் - விவேகானந்தர்
a) 1, 4, 5 மட்டும் b) 2, 3, 4 மட்டும் **c) அனைத்தும்** d) எதுவுமில்லை

20. தவறான இணை எது?
1. பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய ஆண்டு - 1925
2. பெரியாரின் தமிழ் ஏடுகள் குடியரசு, புரட்சி, விடுதலை
3. ஈ.வே.ரா.வுக்கு பெரியார் பட்டம் வழுங்கப்பட்ட ஆண்டு - 1938
4. தந்தை பெரியாருக்கு யுனெஸ்கோ நிறுவனம் தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ் என்ற பட்டம் வழங்கிய ஆண்டு- 1970
a) 1, 4 மட்டும் b) 2, 3 மட்டும் c) அனைத்தும் **d) எதுவுமில்லை**

21. பனராசில் மத்திய இந்து பள்ளியை நிறுவ மதன்மோகன் மாளவியாவுடன் உறுதுணையாக இருந்தவர்?
a) கிருபாளினி **b) அன்னிபெசண்ட்** c) வாஜ்பாய் d) அத்வானி

22. 1873-ல் சத்ய சோதக் சமாஜம் என்ற அமைப்பை தோற்றுவித்தவர்?
a) ஈஸ்வரசந்திரவித்யா சாகர் b) மதன்மோகன் மாளவியா
**c) ஜோதிபா கோவிந்தாபூலே** d) நிதிபதிரானடே

23. 1867-ஆம் ஆண்டு ஆத்மராம் பாண்டுரங் பிரார்த்தனை சமாஜத்தை தோற்றுவித்த இடம்?
**a) பம்பாய்** b) கல்கத்தா c) லாகூர் d) மிட்னாபூர்

24. சரியான இணை எது?
1. வேதகங்களுக்கு திரும்புங்கள் என்றவர் - தயானந்த சரஸ்வதி
2. சுத்திய இயக்கம் - சுவாமி தயானந்த சரஸ்வதி
3. சத்யார்த்த பிரகாஷ் - சுவாமி தயானந்த சரஸ்வதி
4. தயானந்த சரஸ்வதி பிறந்த இடம் குஜராத் சத்தியவார் பகுதி
a) 1, 2, 3 மட்டும் b) 3, 4 மட்டும் c) 1, 2, 4 மட்டும் **d) அனைத்தும்**

25. இந்திய பல்லைக்கழகங்களின் சட்டத்தை கர்சன்பிரபு இயற்றிய ஆண்டு?
**a) 1904** b) 1905 c) 1906 d) 1907

26. இந்தியாவின் முதல் வைஸ்ராய்?
a) ரிப்பன் **b) கானிங்** c) டல்ஹௌசி d) பெண்டிங்

27. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம்கொண்டு வரப்பட்ட ஆண்டு?
**a) 1878** b) 1882 c) 1898 d) 1902

28. (1878-80)-ல் முதலாவது பஞ்ச குழுவுக்கு தலைமை வகித்தவர்?
a) லிட்டன் b) ரிப்பன் c) கர்சன் **d) சர் ரிச்சர்டு ஸ்ட்ரோச்சி**

29. 1857-ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலை போர் என்று கருதியவர்?
a) சர்.ஜான் லாரன்ஸ் **b) வீரசவார்க்கர்** c) எஸ்.என்.சென் d) ஆர்.சி.மஜும்தார்

30. 1857 பாரக்பூரில் முதல் கலகம் வெடித்த நாள்?
a) மார்ச் 30 b) மார்ச் 28 **c) மார்ச் 29** d) மார்ச் 31

31. இந்திய மக்களின் மேக்னா கார்ட்டா (உரிமை சாசனம்) எனப்படும். விக்டோரியா மகாராணியின் அறிக்கை அலகாபாத்தில் கானிங்பிரவு அறிவித்த நாள்?
**a) நவம்பர் 1, 1858** b) நவம்பர் 2, 1858 c) நவம்பர் 3, 1858 d) நவம்பர் 4, 1858

32. வேலூர் கலகத்திற்கு காரணம் எது?
a) வாரிசு இழக்கும் கொள்கை b) கப்பம் வசூலித்தல்
**c) புதிய ஆயுதம், சீருடை அறிமுகம்** d) பொருளாதாரக் காரணம்

33. பகோடா என்பது?
a) தங்கம் b) வெள்ளி **c) ரூபாய்** d) தின்பண்டம்

34. விதவை மறுமணச்சட்டம் நிறைவேற்றப்பட்ட நாள்?
**a) ஜுலை 13, 1856** b) ஜுலை 15, 1856 c) ஜுலை 12. 1856 d) ஜுலை 14, 1856

35. விதவை மறுமணம் குறித்த சட்டமுன் வரைவை அறிமுகப்படுத்தியவர்?
a) ராஜாராம்மோகன்ராய் b) பெரியார் c) ஜோதிபூலே **d) ஜே.பி.கிராண்ட்**

36. தகுதி இருப்பவை உயிர் வாழும் என்ற கோட்பாட்டை உருவாக்கியவர்?
a) டெனிம் b) ரூஸ்வெல்ட் **c) டார்வின்** d) மேற்கூரிய அனைத்தும்

37. அடிமை வாணிபம் என்பன?
a) பெண்கள் கடத்தல் b) குழந்தைகளின் கடத்தல் c) மனிதர்கள் கடத்தல் **d) அனைத்தும்**

38. இனவெறி ஆட்சி என்பன?
**a) ஒரு இனம் மற்றொரு இனத்தை அடக்குதல்**
b) கருப்பர் இனம் வெள்ளையர் இனத்தை அடக்குதல்
c) சித்ரவதை d) உயர்குடி சமூகம்

39. முதலாளித்துவத்திலிருந்து சமதர்மத்துவத்துக்கு மாறும் சமூக இயக்கத்தின் மாற்றத்தை ……… எனலாம்?
a) கட்டமைப்பு மாற்றம் b) நிறுவன அமைப்பில் மாற்றம்
**c) a, b** d) ஏதுமில்லை

40. நம் இரத்தத்தையும் வேர்வையையும் தவிர இழப்பதற்கு ஏதுமில்லை என்று கூறியவர்?
**a) மார்க்ஸ்** b) மாவோ c) ஸ்டாலின் d) லெனின்

41. நாராயணகுரு எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்?
a) ஆந்திரப்பிரதேசம் b) மேற்கு வங்காளம்
c) மகாராஷ்டிரா **d) கேரளா**

42. வைக்கம் இயக்கத்தை தலைமை தாங்கி நடத்தியவர்?
**a) பெரியார்** b) ராஜாஜி c) நேரு d) காந்தியடிகள்

43. தேசங்களின் வளம் பற்றிய ஓர் ஆய்வு என்ற நூலை எழுதியவர்?
a) கீன்ஸ் **b) ஆதம் ஸ்மித்** c) ரூசோ d) போடின்

44. "தோட்டாக்களால் அல்ல வாக்குச் சீட்டினால்" என கூறியவர்?
a) கேஸ்ட்ரோ **b) மாவோ**
c) சுபாஷ் சந்திர போஸ் d) பகத்சிங்

45. "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்ற புகழ் பெற்ற உரையை ஆற்றியவர்?
a) லிங்கன் b) தோரு
c) காந்தியடிகள் **d) மார்டின் லூதர் கிங்**

46. இட ஒதுக்கீடு கொள்கையின் மூலம்?
a) உயர்த்துதல் b) மேம்படுத்துதல்
c) நீதி வழங்குதல் **d) அனைத்தும்**

47. சாதி அமைப்பு மிகப்பெரிய அளவில் இருந்த மதம்?
a) கிறிஸ்துவ மதம் **b) இந்து மதம்**
c) புத்த மதம் d) ஜைன மதம்

48. ஒரு நியாயமான சமூகத்தில் ?
a) பாகுபாடு இருக்காது b) சாதிகள் இருக்காது
c) மதங்கள் இருக்காது **d) மேற்கூரிய அனைத்தும்**

49. மண்டல் ஆணையம் அமைக்கப்பட்டது?
a) பட்டியலினத்தவருக்காக b) பழங்குடியினருக்காக
c) இதர பிற்பட்ட வகுப்பினருக்காக **d) பிற்பட்ட வகுப்பினருக்காக**

50. **கூற்று :** பிராமணரல்லாதோர், ஆங்கிலேயர் காலத்தில் அரசு பதவிகளில் பணியமர்த்தப்பட்டனர்.
**காரணம் :** 1921-ஆம் ஆண்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சட்டம் இயற்றப்பட்டது.
**a) கூற்றும் காரணமும் சரி, கூற்றுக்கான சரியான விளக்கம்**
b) இரண்டுமே சரி, ஆனால் காரணம் சரியான விளக்கம் இல்லை
c) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
d) கூற்று தவறு, காரணம் சரி

51. அம்பேத்கர் எந்த மதத்திற்கு மாறினார்?
a) கிறிஸ்துவ மதம் b) இந்து மதம்
**c) புத்த மதம்** d) ஜைன மதம்

## <u>புவியியல்</u>

1. தீபகற்ப இந்தியாவில் காணப்படக்கூடிய காடுகளின் வகை யாது?
   a) ஊசியிலைக் காடுகள்　　b) அயன மண்டல காடுகள்
   **<u>c) பருவக்காற்று மழைக்காடுகள்</u>**　　d) உப அயனமண்டல காடுகள்
2. கீழ்க்கண்டவற்றுள் எது புலிகள் சரணாலயம் கிடையாது?
   <u>a) **பாவன் மகாவீர்**</u>　　b) கிர்　　c) இந்திராவதி　　d) ரதன்பூர்
3. கீழ்க்கண்டவற்றுள் தவறாக பொருத்தப்பட்டுள்ள தேசிய பூங்கா எது?
   a) பால் பக்ரன் - மேகாலயா　　<u>b) **பன்னா - பீகார்**</u>
   c) மோலும் - கோவா　　d) வன் விகார் - மத்திய பிரதேசம்
4. பொருத்துக :

| <u>**தேசிய பூங்கா**</u> | | <u>**மாநிலங்கள்**</u> |
|---|---|---|
| a) அன்ஷி | - | 1. ராஜஸ்தான் |
| b) பந்திப்பூர் | - | 2. கர்நாடகா |
| c) பாலைவன பூங்கா | - | 3. தமிழ்நாடு |
| d) கிண்டி | - | 4. கர்நாடகா |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **<u>A</u>** | **<u>2</u>** | **<u>4</u>** | **<u>1</u>** | **<u>3</u>** |
| B | 1 | 2 | 3 | 4 |
| C | 3 | 1 | 2 | 4 |
| D | 1 | 3 | 2 | 4 |

5. 2014-2015-ஆம் ஆண்டில் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தியின் அளவு?
   a) 90.5 மில்லியன் டன்கள்　　**<u>b) 252.7 மில்லியன் டன்கள்</u>**
   c) 280.5 மில்லியன் டன்கள்　　d) 296.4 மில்லியன் டன்கள்
6. நம் நாட்டின் நீர்ப் பங்களிப்பில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமாக வழங்கும் ஆற்றின் பெயர் என்ன?
   a) கிருஷ்ணா　　<u>b) **பிரம்மபுத்ரா**</u>　　c) கங்கா　　d) கோதாவரி
7. ‘சாங்போ’ என அறியப்படும் ஆறு எது?
   a) கங்கா　　<u>b) **பிரம்மபுத்ரா**</u>　　c) யமுனா　　d) கோதாவரி
8. கரிசல் மண் ………………… என்றும் அறியப்படுகிறது?
   a) உவர்ப்பு மண்　　<u>b) **ரெகூர் மண்**</u>
   c) சதுப்பு மண்　　d) வறண்ட மண்
9. பெஹ்டியன்க்லம் விழா இந்தியாவின் எந்த மாநிலத்தோடு தொடர்புடையது?
   a) அஸ்ஸாம்　　<u>b) **மேகாலயா**</u>　　c) சிக்கிம்　　d) அருணாச்சலப்பிரதேசம்
10. பின்வருவனவற்றுள் இந்தியாவின் முதல் ஆற்றல் திறன்படுத்தப்பட்ட இரயில் நிலையம் எது?
    a) மும்பை　　b) தானே　　c) டெல்லி　　<u>d) **கச்சேகுடா**</u>
11. சோஜிலா திட்டம் இதனுடன் தொடர்புடையது?
    <u>a) **குகைபாதை**</u>　　b) காடு　　c) ஆற்றல்　　d) பொழுதுபோக்கு
12. இந்தியாவில் 75% கடல் மீன்பிடிப்பில் பங்களிக்கும் பகுதி?
    a) கிழக்கு கடற்கரைப்பகுதி　　b) வடக்கு கடற்கரைப்பகுதி
    c) தெற்கு கடற்கரைப்பகுதி　　<u>d) **மேற்கு கடற்கரைப்பகுதி**</u>
13. இந்தியாவின் முதல் அறிவியல் பூர்வமான நவீன வன உயிர் மரபணு வள வங்கி தொடங்கப்பட்டுள்ள இடம்?
    a) திருப்பதி　　b) விஜயவாடா
    <u>c) **ஹைதராபாத்**</u>　　d) விசாகப்பட்டினம்
14. 2011-ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி மிகக்குறைந்த மக்களடர்த்தியை கொண்ட இந்திய மாநிலம்?
    a) மேகாலயா　　<u>b) **அருணாச்சலப் பிரதேசம்**</u>
    c) நாகலாந்து　　d) இமாச்சலப் பிரதேசம்

# <u>வேலை, திறன், ஆற்றல், வெப்பம் அறிவியல்</u>



1. வேலை = W = F x S
2. வேலையின் அலகு ஜுல் (J)
3. ஜேம்ஸ் பிரிஸ்கோட் ஜுல் பிரிட்டனைச் சார்ந்தவர்
4. பொருள் ஒன்று வேலையை செய்வதற்கான திறன் ஆற்றல்
5. ஆற்றலின் அலகு ஜுல்
6. ஆற்றல் நிலையாற்றல், இயக்க ஆற்றல்
7. அணையில் தேக்கப்படும் நீர் நிலையாற்றல்
8. நிலையாற்றலுக்கான கோவை Ep = mgh
9. இயக்க ஆற்றலுக்கான கோவை Ek = $1/2\ mv^2$
10. திறனின் அலகு ஜுல் / வினாடி (or) வாட் குறியீடு W
11. $1\ W = 1\ JS^{-1}$
12. நீராவி எந்திரம் - ஜேம்ஸ்வாட்
13. 1 யூனிட் = 1 கிலோவாட் மணி = 1000 வாட் மணி
14. 1 யூனிட் = $3.6 \times 10^6$ ஜுல், வணிகமுறையில் திறனின் அலகு கிலோவாட் மணி
15. வெப்ப ஏற்பு திறன் அலகு ஜுல் / கெல்வின் ($Jk^{-1}$)
16. தன்வெப்ப ஏற்பு திறன் அலகு ஜுல் / கி.கி. / கெல்வின் ($Jkg^{-1}\ K^{-1}$)
17. பாதரசத்தின் தன்வெப்ப ஏற்பு திறன் $140\ J\ kg^{-1}\ k^{-1}$
18. நீரின் தன்வெப்ப ஏற்பு திறன் $4180\ Jkg^{-1}\ K^{-1}$
19. தனி சுழி வெப்பநிலை = $O^0$ k (or) - $273^0C$
20. கெல்வின் அளவு (k) = செல்சியஸ் + $273^o$
21. செல்சியஸ் அளவு (C) = கெல்வின் அளவு + $273^o$
22. மனிதனின் இயல்பான வெப்பநிலை $36.9^oC$ (or) $98.4^0$ F
23. மனிதனின் இயல்பான வெப்பநிலை கெல்வின் அளவில் $310^0k$
24. பாயில் விதி P**ண்ண** 1/V, கார்லஸ் விதி 1) கனஅளவு விதி V **ண்ண** T 2) அழுத்த விதி P **ண்ண** T
25. நல்லியல்பு வாயு சமன்பாடு PV = nRT
26. வாயு மாறிலி R = $8.31\ J\ mo1^{-1}\ K^{-1}$

ஆற்றல் மாற்றங்கள்

| | | |
|---|---|---|
| நிலையாற்றல் இயக்க ஆற்றலாக மாறுதல் | - | அணைநீர் வெளியேறுதல் |
| ஒலி ஆற்றல் மின்னாற்றல் | - | ஒலி வாங்கி |
| ஒளி ஆற்றல் மின்னாற்றல் | - | தொலைக்காட்சி, நிழற்படற்கருவி, ஒளிமின்கலன் |
| மின்னாற்றல், வெப்பஆற்றல் | - | மின்கலவை பெட்டி |
| மின்னாற்றல் இயக்க ஆற்றல் | - | மின்விசிறி |
| மின் ஆற்றல் ஒளி ஆற்றல் | - | மின் விளக்கு |

## அறிவியல்

1. வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம்?
   a) தாமிரம் b) பாதரசம் c) வெள்ளி d) தங்கம்

2. இரசவாதிகள் நீரைக் குறிப்பதற்குப் பயன்படுத்திய படக்குறியீடு?
   a)  b)  c)  d) 

3. எந்தத் தனிமத்தின் பெயர் கோள்களின் பெயரிலிருந்து பெறப்படவில்லை?
   a) புளுட்டோனியம் b) நெப்டியூனியம்
   c) யுரேனியம் d) பாதரசம்

4. பாதரசத்தின் குறியீடு?
   a) Ag b) Hg
   c) Au d) Pb


5. கம்பியாக நீளும் தன்மையைப் பெற்றுள்ள அலோகம் எது?
   a) நைட்ரஜன் b) ஆக்ஸிஜன்
   c) குளோரின் d) கார்பன்

6. உலோகங்களை அவற்றின் தகடுகளாக மாற்ற உதவும் பண்பு எது?
   a) கம்பியாக நீளும் பண்பு b) தகடாக விரியும் பண்பு
   c) தகடாக நீளும் பண்பு d) பளபளப்புத் தன்மை

7. மின்சாரத்தைக் கடத்துக் அலோகம்?
   a) கார்பன் b) ஆக்சிஜன்
   c) அலுமினியம் d) சல்ஃபர்

8. கரிக்கோலின் (பென்சிலின்) நடுத்தண்டில் இருப்பது?
   a) கிராஃபைட் b) வைரம்
   c) அலுமினியம் d) கந்தகம்

9. மூலக்கூறுகளின் அமைப்பைக் கொண்டு பின்வரும் பொருள்களின் இயற்பியல் நிலைகளை அடையாளம் காண்க?




   a) A – வாயு, B – திண்மம், C - திரவம் b) A – திரவம் , B – திண்மம், C - வாயு
   c) A – வாயு, B – திண்மம், C - திரவம் d) A – திரவம் , B – வாயு, C - திண்மம்

10. காகிதம் எரிதல் என்பது ஒரு ……………………. மாற்றம்?
    a) இயற்பியல் b) வேதியியல்
    c) இயற்பியல் மற்றும் வேதியியல் d) நடுநிலையான

11. தீக்குச்சி எரிதல் என்பது ……………………….. அடிப்படையிலான வேதி வினைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்?
    a) இயல் நிலையில் சேர்தல் b) மின்சாரம்
    c) வினைவேக மாற்றி d) ஒளி

12. …………………………. உலோகம் துருப்பிடித்தலுக்கு உள்ளாகிறது?
    a) வெள்ளீயம் b) சோடியம்
    c) காப்பர் d) இரும்பு

13. வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பாக மாறுவதற்குக் காரணமான நிறமி?
a) நீரேறிய இரும்பு (II) ஆக்சைடு b) மெலனின்
c) ஸ்டார்ச் d) ஓசோன்

14. பிரைன் என்பது ................ இன் அடர் கரைசல் ஆகும்?
a) சோடியம் சல்பேட் b) சோடியம் குளோரைடு
c) கால்சியம் குளோரைடு d) சோடியம் புரோமைடு

15. சுண்ணாம்புக்கல் ..................... ஐ முதன்மையாகக் கொண்டுள்ளது?
a) கால்சியம் குளோரைடு b) கால்சியம் கார்பனேட்
c) கால்சியம் நைட்ரேட் d) கால்சியம் சல்பேட்

16. கீழ்காண்பவற்றுள் எது மின்னாற்பகுத்தலைத் தூண்டுகிறது?
a) வெப்பம் b) ஒளி
c) மின்சாரம் d) வினேவேக மாற்றி

17. ஹேபர்முறையில் அம்மோனியா தயாரித்தலில் ..................... வினைவேக மாற்றியாக செயல்படுகிறது?
a) நைட்ரஜன் b) ஹைட்ரஜன்
c) இரும்பு d) நிக்கல்

18. மழை நீரில் கரைந்துள் சல்பர் டை ஆக்சைடு மற்றும் நைட்ஜன் ஆக்சைடுகள் ................. ஐ உருவாக்குகின்றன?
a) அமிலமழை b) காரமழை
c) அதிகமழை d) நடுநிலைமழை

19. ............................... புவி வெப்பமயமாதலுக்குக் காரணமாகின்றன?
a) கார்பன் டை ஆக்சைடு
b) மீத்தேன்
c) குளோரோ புளூரோ கார்பன்கள்
d) கார்பன் டை ஆக்சைடு, மீத்தேன், குளோரோ புளூரோ கார்பன்கள்

20. கீழ்காண்டவற்றுள் ஆக்சிஜனைப் பற்றிய சரியான கூற்று எது?
a) முழுமையாக எரியும் வாயு
b) பகுதியளவு எரியும் வாயு
c) எரிதலுக்கு துணைபுரியாத வாயு
d) எரிதலுக்குத் துணைபுரியும் வாயு

21. காற்றோட்டம் செய்யப்பட்ட நீரில் .................. உள்ளது?
a) காற்று b) ஆக்சிஜன்
c) கார்பன் டை ஆக்சைடு d) நைட்ரஜன்

22. சால்வே முறை .............. உற்பத்தி செய்ய பயன்படுகிறது?
a) சுண்ணாம்பு நீர் b) காற்றட்டம் செய்யப்பட்ட நீர்
c) வாலை வடிநீர் d) சோடியம் கார்பனேட்

23. கார்பன் டை ஆக்சைடு நீருடன் சேர்ந்து ...................... மாற்றுகிறது?
a) நீல லிட்மசை சிவப்பாக
b) சிவப்பு லிட்மசை நீலமாக
c) நீல லிட்மசை மஞ்சளாக
d) லிட்மசுடன் வினைபுரிவதில்லை

24. அசோட் எனப்படுவது எது?
a) ஆக்சிஜன் b) நைட்ரஜன்
c) சல்பர் d) கார்பன் டை ஆக்சைடு

## **<u>அரசியல் அறிவியல்</u>**

1. 42-வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின்படி எத்தனை அதிகாரங்கள் மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டன?
   a) 3　b) 4　**<u>c) 5</u>**　d) 6

2. 1955- ஆம் ஆண்டில் அலுவலக மொழி ஆணையத்தின் தலைவர் யார்?
   a) கே.சி.பந்த்　b) ஜி.பி.பந்த்　c) எஸ்.கே.தர்　**<u>d) பி.ஜி.ஹெர்</u>**

3. பொருத்துக :

| ***<u>பொருள்</u>*** | | ***<u>இந்திய அரசியலமைப்பின் பகுதி</u>*** |
|---|---|---|
| a) பொதுப்பணியாளர் தேர்வாணையங்கள் | - | 1. XVIII |
| b) தேர்தல்கள் | - | 2. XIV - A |
| c) நெருக்கடி நிலை அம்சங்கள் | - | 3. XIV |
| d) தீர்ப்பாயங்கள் | - | 4. XV |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 1 | 2 | 3 | 4 |
| B | 2 | 3 | 1 | 4 |
| C | 4 | 3 | 2 | 1 |
| **<u>D</u>** | **<u>3</u>** | **<u>4</u>** | **<u>1</u>** | **<u>2</u>** |

4. முதல் இந்திய வாக்குப்பதிவு இயந்திரத்தை வடிவமைத்தவர் யார்?
   a) எஸ்.கே.தோரத்　b) நரேந்திர ஜாதவ்
   **<u>c) எம்.பி. ஹனிபா</u>**　d) ஏ.ஜி.ராவ்

5. இந்தியாவின் முதல் பெண் தலைமை தேர்தல் ஆணையர் யார்?
   **<u>a) வி.எஸ்.ரமாதேவி</u>**　b) ஜி.டி.தாஸ்
   c) எஸ்.கே.பேடி　d) ஆர்.எம்.நிகாம்

6. இந்தியாவின் முதல் லோக்பால் அமைப்பு எத்தனை உறுப்பினர்களை கொண்டுள்ளது?
   a) ஒன்பது உறுப்பினர்கள் மற்றும் ஒரு தலைவர்
   b) எட்டு உறுப்பினர்கள் மற்றும் ஒரு தலைவர்
   c) ஏழு உறுப்பினர்கள் மற்றும் ஒரு தலைவர்
   <u>d) **நான்கு நீதித்துறை சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 4 நீதித்துறை சாராத உறுப்பினர்கள் உடன் ஒரு தலைவர்**</u>

7. மாநிலங்களுக்கிடையேயான மன்றம் உருவாக்கப்பட்டது?
   a) 1980　**<u>b) 1990</u>**　c) 2000　d) 2010

8. கீழ்க்கண்டவற்றில் எது இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சி இயல்பு கிடையாது?
   1. அரசியலமைப்பின் மேலான தன்மை　2. அகில இந்தியப் பணிகள்
   3. ஒற்றைக் குடியுரிமை　4. சுதந்திரமான நீதித்துறை
   5. ஈரவை சட்டமன்றம்　6. ஒன்றிணைந்த நீதித்துறை
   a) 1, 4 மற்றும் 5　b) 1, 5 மற்றும் 6　**<u>c) 2, 3 மற்றும் 6</u>**　d) 2, 3 மற்றும் 4

9. இந்திய அரசியலமைப்பின் 12-வது பகுதியானது மத்திய-மாநில உறவுகளில் உள்ள ஒரு உறவை மட்டும் குறிப்பிடுகிறது?
   a) சட்டமன்ற உறவுகள்　b) நிர்வாக உறவுகள்　**<u>c) நிதி உறவுகள்</u>**　d) நீதித்துறை உறவுகள்

10. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
    **<u>a) 1951</u>**　b) 1952　c) 1953　d) 1954

11. தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரை, மாவட்ட அளவில், மாவட்டத் திரும்பும் அதிகாரியாக யார் சயல்படுகிறார்கள்?
    a) மாவட்ட வருவாய் அதிகாரி　b) சார் ஆட்சியர்
    **<u>c) மாவட்ட ஆட்சியர்</u>**　d) மாநில தேர்தல் ஆணையர்

12. கீழ்க்கண்டவற்றில் எந்த வழக்கில் தாஜ்மகாலைப் பாதுகாக்க 299 தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது?
    **<u>a) M.C. மேத்தா V மத்திய அரசு</u>**　b) வினீத் நாராயண் V மத்திய அரசு
    c) சஞ்சீவ் பட்நாகர் V மத்திய அரசு　d) ராஜீவ் ரஞ்சன்சிங் V மத்திய அரசு

13. முன்னாள் தமிழ்நாட்டின் முதல் அமைச்சரான எம்.ஜி.இராமச்சந்திரனை பற்றிய கூற்றுகளில் தவறானது எது?
a) +2 கல்வி முறையை தமிதுழகத்தில் கொண்டு வந்தார்
b) பாரதியார் பல்கலைகழகம் இவர் பதவி காலத்தில் துவங்கப்பட்டது
c) மூன்று முறை மற்றும் பதினொரு வருடங்கள் முதல் அமைச்சராக ஆட்சி பொறுப்பில் இருந்தார்
d) **இவர் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தார்.**

14. இந்திய அரசியலமைப்பின் கீழ் ஒரு சில அடிப்படை உரிமைகளை தவிர மற்ற அடிப்படை உரிமைகளை எப்பொழுது நிறுத்தி வைக்கப்படும்?
a) பொது தேர்தல் சமயத்தில் b) மாநில நெருக்கடியின் போது
c) **தேசிய நெருக்கடியின் போது** d) நிதி நெருக்கடி சமயத்தில்

15. யார் மாநகராட்சி ஆணையரை பணியில் அமர்த்துவது?
a) குடியரசுத்தலைவர் b) பிரதம மந்திரி
c) மத்திய அரசாங்கம் d) **மாநில அரசாங்கம்**

16. தேர்தல் செலவினங்களைப் பற்றிய சட்ட விதிமுறைகளைக் கூறுவது?
a) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1951), பிரிவு 67
b) **மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1951), பிரிவு 77**
c) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1951), பிரிவு 87
d) மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1951), பிரிவு 97

17. ஒன்றியப் பிரதேசமான டெல்லியில் இருந்து மக்களவைக்கு எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?
a) 1 b) 3 c) 5 d) **7**

18. இந்தியாவில் முதன் முதலாக லோக் ஆயுக்தா கொண்டு வந்த மாநிலம்?
a) ஒரிசா b) பீகார் c) பஞ்சாப் d) **மகாராஷ்டிரா**

19. ஓம்புட்ஸ்மேன் என்ற அமைப்பு முதலில் தோற்றுவிக்கப்பட்டது?
a) நார்வே b) **சுவீடன்** c) டென்மார்க் d) அமெரிக்கா

20. CEE என்பது?
a) **சூழ்நிலைக் கல்வி மையம்** b) பொருளாதார கல்வி மையம்
c) சுற்றுப்புற உயிரினக் கல்வி மையம் d) வேலை வாய்ப்பு கல்வி மையம்

21. DPAP என்பது?
a) **வறட்சி பாதித்த நிலப்பரப்புத் திட்டம்** b) வறட்சி வறுமை பாதித்த நிலப்பரப்புத் திட்டம்
c) வறட்சி பாதித்த முகமைத் திட்டம் d) வறட்சி பாதித்த மக்கள் நிலப்பரப்புத் திட்டம்

22. பின்வரும் எந்த கூற்று என்.ஏ.பல்கிவாலாவோடு தொடர்புடையது?
a) **முகவுரை அரசியலமைப்பின் "அடையாள அட்டை"**
b) முகவுரை நமது இறைமை பெற்ற ஜனநாயக குடியரசின் "ஜாதகம்"
c) முகவுரை இந்திய அரசியலமைப்பின் மிக முக்கிய பகுதி
d) முகவுரை அரசியலமைப்பின் "திறவு கோல்"

23. பொருத்துக :

| ***மாநிலங்கள்*** | | ***மாநிலங்களவை உறுப்பினர் எண்ணிக்கை*** |
|---|---|---|
| a) தமிழ்நாடு | - | 1. 16 |
| b) மேற்கு வங்காளம் | - | 2. 19 |
| c) மகாராஷ்டிரா | - | 3. 11 |
| d) மத்தியப் பிரதேசம் | - | 4. 18 |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A | 4 | 3 | 2 | 1 |
| **B** | **4** | **1** | **2** | **3** |
| C | 4 | 2 | 1 | 3 |
| D | 4 | 1 | 3 | 2 |

24. பொருளாதார சீர்திருத்தம் இந்தியாவில் 1991-ஆம் ஆண்டு எந்த காங்கிரஸ் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது?
a) ராஜிவ் காந்தி b) இந்திரா காந்தி c) P.V. **நரசிம்மராவ்** d) மொராஜ் தேசாய்

# திறனறிவு

1. $(x-2)$ என்பது $2x^3-9x^2+7x+6$ என்ற பல்லுறுப்புக் கோவையின் காரணி எனில் மற்ற இரு காரணிகள்?

a) (2x+1) (x+3) b) (2x-1) (x+3)

c) (x+3) (x-1) **d) (2x+1) (x-3)**

2. 2 ரூபாய் 70-பைசாவில் 15 பைசா எத்தனை சதவீதம்?

(A) $5\frac{5}{9}\%$ (B) $9\frac{5}{5}\%$

(C) $4\frac{5}{9}\%$ (D) $9\frac{9}{5}\%$

3. ஒரு சமபக்க முக்கோணத்தின் பரப்பளவு $900\sqrt{3}$ செ.மீ.$^2$ எனில் பக்க அளவைக் காண்க?

a) 30 செ.மீ **b) 60 செ.மீ** c) 90 செ.மீ d) 120 செ.மீ

4. ரூ.8000-க்கு 10% வட்டிவீதம் எனில் இரண்டு ஆண்டுகளில் கிடைக்கும் கூட்டு வட்டிக்கும் தனி வட்டிக்கும் உள்ள வித்தியாசம் காண்க?

a) ரூ.800 **b) ரூ.80**

c) ரூ.80,000 d) ரூ.10,000

5. $\frac{1}{5}:\frac{1}{x}::\frac{1}{x}:\frac{1}{1.25}$ எனில் $x$ ன் மதிப்பு காண்.

(A) $\frac{2}{5}$ (B) $\frac{5}{2}$

(C) $\frac{1}{5}$ (D) $\frac{3}{5}$

6. பின்வருவனவற்றுள் எது முடிவுறு தசமத் தீர்வு?

(A) $\frac{5}{64}$ (B) $\frac{8}{9}$

(C) $\frac{14}{15}$ (D) $\frac{1}{12}$

7. ஒரு வியாபாரி ஒரு பொருளை ரூ.1,200-க்கு வாங்கினார். பின்பு அதன் அடக்கவிலைக்கு மேல் 30% உயர்த்தி, குறித்த விலை ஆக்கினார். இதற்கு 20% தள்ளுபடி கொடுத்து விற்றார் எனில், விற்பனை விலை மற்றும் இலாப சதவீதம் காண்க?

a) ரூ.1,560, 6% b) ரூ.1,428, 4%

**c) ரூ.1,248, 4%** d) ரூ.1,650, 6%

8. 100 மாணவர்களின் மதிப்பெண்களின் சராசரி 40 என்று கணக்கிடப்பட்டது. பின்பு, 53 என்ற மதிப்பெண் 83 என்று தவறுதலாக எடுக்கப்பட்டது தெரிய வந்தது. சரியான மதிப்பெண்களைக் கொண்டு, சரியான சராசரியைக் காண்க?

**a) 39.7** b) 3970 c) 3.97 d) 397

9. நாளை திங்கட்கிழமை எனில் நேற்று என்ன கிழமை?

a) ஞாயிற்றுக்கிழமை **b) சனிக்கிழமை**

c) வெள்ளிக்கிழமை d) செவ்வாய்க்கிழமை

10. 2 5 8 x 2 3 7 என்ற எண் 11 ஆல் வகுபடும் எனில் x-ன் மதிப்பு யாது?

a) 1 b) 7 **c) 0** d) 9

11. ஒரு தொடர் வண்டி 180 கி.மீ. / மணி என்ற வேகத்தில் செல்கிறது எனில், அதன் வேகத்தை மீ/வி-ல் காண்க?

a) 15 மீ/வி b) 30 மீ/வி c) 40 மீ/வி **d) 50 மீ/வி**

12. ஒரு இராணுவ முகாமில் 1000 வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 70 நாட்களுக்கு போதுமான மளிகைப் பொருட்கள் உள்ளன? அந்த முகாமிற்கு மேலும் 400 வீரர்கள் வந்து சேர்ந்தார்கள் எனில் எத்தனை நாட்களுக்கு அந்த மளிகைப் பொருட்கள் போதுமானதாக இருக்கும்?

a) 40 நாட்கள் **b) 50 நாட்கள்** c) 45 நாட்கள் d) 55 நாட்கள்

13. ஒரு நபருக்கு வேலை கிடைப்பதற்கான நிகழ்தகவு $x/3$. வேலை கிடைக்காமல் இருப்பதற்கான நிகழ்தகவு 2/3 எனில், $x$-ன் மதிப்பு?

a) 1.5 **b) 1** c) 2 d) 3

14. மீ.பொ.வ. காண்க : $x^n, x^{n+1}, x^{n+2}$?

**a) $x^n$** b) $x^{n+2}$ c) 1 d) $x^{n+1}$

15. 66 செ.மீ x 12 செ.மீ. எனும் அளவு கொண்ட ஒரு உலோகத் தகட்டினை 12 செ.மீ. உயரமுள்ள ஒரு உருளையாக மாற்றினால் கிடைக்கும் உருளையின் கன அளவு காண்க?

a) 2772 க.செ.மீ b) 5148 க.செ.மீ

c) 4185 க.செ.மீ **d) 4158 க.செ.மீ**

16. விரைவு தகவல் குறியீடு என்பது?

a) புத்தகம் **b) படம்** c) கட்டிடம் d) மரம்

17. கீழ்க்காணும் பரவலின் சராசரி காண் :

| மதிப்பு : | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| நிகழ்வெண் : | 1 | 3 | 2 | 4 | 8 | 2 |

**(A) 4.5** (B) 9

(C) 5 (D) 4

18. மதிப்பு காண்க : $\sqrt{383+\sqrt{302-\sqrt{164+\sqrt{28-\sqrt{9}}}}}$

(A) 19 (B) 16

**(C) 20** (D) 22

19. 15 செ.மீ. 20 செ.மீ மற்றும் 25 செ.மீ பக்க அளவுகள் கொண்ட ஒரு முக்கோணத்தின் அரைச்சுற்றளவு?

a) 15 செ.மீ. b) 45 செ.மீ. **c) 30 செ.மீ.** d) 60 செ.மீ.

20. ஒரு பழ வியாபாரி 12 பெட்டி திராட்சைகளை ஒரு பெட்டி ரூ.160 என்ற வீதம் வாங்கினார். அதில் இரண்டு பெட்டிகள் அழுகிவிடுகிறது. மீதமுள்ள பெட்டிகளை ஒரு பெட்டிக்கு ரூ.200 வீதம் விலைக்கு விற்கிறார் எனில் இலாப சதவீதம்?

a) 4.258 b) 4.33

**c) 4.167** d) 4.52

21. ஒரு மொத்த வியாபாரி ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை ரூ.10,000-க்கு வாங்கி ரூ.12,000-க்கு விற்கிறார். ஒரு பெட்டியின் இலாபம்/நட்டத்தைக் காண்க?

a) ரூ.2,000 நட்டம் **b) ரூ.2,000 இலாபம்**

c) ரூ.10,000 இலாபம் d) ரூ.10,000 நட்டம்

## சைவம் - வைணவம்

* கல்லால் செய்யப்படும் லிங்கத்திற்கு பெயர் - **சைலஜம்**
* ஞானத்தைக் காட்டும் அடையாள முத்திரை - **சின் முத்திரை**
* 'ஆலயம்' என்பதை ஆ + லயம் என பிரிப்பர் இதில் 'ஆ' என்பதன் பொருள் - **ஆன்மா**
* மனித வடிவத்தோடு ஆலயத்தை ஒப்பிடும் போது பாதத்தை இவற்றோடு ஒப்பிடுவர் - **கோபுரம்**
* வேத கடவுள்களில் விலங்குகளின் "தெய்வம்" என்று எந்த கடவுளை குறிப்பிடப்படுகிறது - **ருத்திரர்**
* திருக்கோயிலில் உள்ள ஓர் பகுதியை ஸ்தூலலிங்கம் என குறிப்பிடுவர் - **கோபுரம்**
* கண்டம் முதல் வட்ட வடிவில் உள்ள விமானம் - **வேசரம்**
* வேதம் என்ற சொல் எந்த மூலச் சொல்லிலிருந்து பெறப்பட்டது - **வித்**
* குருவின் அருகில் சிரத்தையோடு அமர்ந்து கேட்டல் என்பது எதை விளக்குகிறது - **உபநிடதங்களை**
* உபநிடதங்களின் முக்கியக் கோட்பாடு - **பிரம்மமும் ஆன்மாவும் ஒன்று**
* உபநிடதக் கருத்தின் படி உலகைக் கடந்த பிரம்மத்தின் நிலைக்கு - **நிஷ்பிரபஞ்சம் பெயர்**
* உபநிடதங்கள் பிரம்மத்தின் இரு நிலைகளில் ஒன்றை ச - பிரபஞ்சம் என்கிறது, மற்றொன்றின் பெயர் - **நிஷ்பிரபஞ்சம்**
* பண்டைய சாஸ்திரங்களில் திருக்கோயில்கள் கட்டுவதற்கான கட்டிடக்கலை பாணிகளின் வகைகள் - **மூன்று**
* திருமாலின் கருவிகளான பாஞ்சசன்னியம், கதாயுதம் மற்றும் நந்தகம் என்பவற்றின் அம்ச ஒப்புமை எந்த மூன்று ஆழ்வார்களுக்கு பொருந்தும் - **பொய்கை, பூதம், பேயாழ்வார்**
* சாக்கியத்தைத் தோற்றுவித்தவர் - **கபிலர்**
* ........................ ஆட்சி காலத்தை "இந்து இந்திய வரலாற்றின் பொற்காலம்" என்றழைக்கப்படுகிறது - **குப்தர் காலம்**
* கடவுள் இல்லையென கூறும் சமயம் - **சமணம்**
* சடகோபர் எனப் பெயர் கொண்ட ஆழ்வார் - **நம்மாழ்வார்**
* சமரச சன்மார்க்க சங்கத்தை நிறுவியவர் - **இராமலிங்க சுவாமி**
* மெய்கண்ட தேவநாயனார் எழுதிய சாத்திரம் - **சிவஞானபோதம்**
* நம்மாழ்வாரைப் பற்றியே தனது பாசுரங்கள் அனைத்தும் எழுதிய ஆழ்வார் - **மதுரகவியாழ்வார்**
* வழிபாட்டு வழி மூலம் கடவுளுடைய அருளைப் பெறுவது .......... மார்க்கம் - **பக்தி மார்க்கம்**
* "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
  உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே" - எனக் கூறியவர் ....................... - **அப்பர்**
* தமிழகத்தில் சந்திரனுக்கு உகந்த ஸ்தலம் - **திங்களூரில் உள்ளது**
* சனி பகவானுக்கு உகந்த ஊர் - **திருநள்ளாறு**
* 'இனியவை நாற்பது' ................ நூற்றாண்டில் இயற்றப்பட்டது - **கி.பி. 5-ம் நூற்றாண்டு**
* ஆருகத மதம் என்றழைக்கப்படுவது - **சமண மதம்**
* "ஊன நடனம் ஒருபால், ஒருபாலா
  ஞானநடம், தான் நடுவே நாடு" - இப்பாடல் .................ல் அமைந்துள்ளது - **திருவருட்பயன்**
* உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்" என ஆரம்பிக்கும் பாடலை அருளியது - **திருமூலர்**
* திருஅருட்பிரகாச வள்ளலார் சித்தி பெற்ற வருடம் - **30.01.1874**
* ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறைந்த வருடம் - **1886**